# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 03.06.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஆவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்காகவே அல்லாஹ் அவர்களை அனுப்பினான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் இருப்பவை எல்லாம் அவர்களுடையதல்ல. மாறாக, அவை எல்லாமே அவர்களது எஜமானரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடையதாகும். அவர்கள பெற்ற அருள்கள் எல்லாமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமையாக இருந்ததன் விளைவாகத்தான் அவர்களுக்கு கிடைத்தது.

**ஓரிடத்தில் அல் வஸிய்யத் என்ற நூலில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

"முஹம்மதிய நுபுவ்வத் தனது சுயமாக அருள்பாலிக்கும் நிலையை இழக்கவில்லை. மாறாக, எல்லா நபித்துவத்தை விடவும் அதில் அதிகமான அருள்கள் இருக்கின்றன. இந்த நுபுவ்வத்தைப் பின்பற்றி நடப்பது ஒருவரை மிக எளிதான முறையில் இறைவனை அடையும்படி செய்கிறது."

எனவே, அவர்கள் இந்த அருள்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பெற்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் காரணமாக அல்லாஹ் அவர்களை நபித்துவத்தின் உயர் தகுதி வரை கொண்டு சென்றான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி நடப்பது மட்டும் போதுமானதல்ல என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றுவதால் மட்டும் ஒரு மனிதன் நபியாகி விட முடியாது. ஏனென்றால், முழுமையாக அவர்களைப் பின்பற்றினால் போதும் என்று மட்டும் கூறுவதில் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழிவு ஏற்பட்டு விடும். ஆனால், உம்மத்தி அதாவது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பதும் அத்துடன் நபியாகவும் இருந்தால்தான் அதாவது உம்மத்தி நபி என்ற இரண்டு சொற்களும் சேரும் வகையில் அவை இரண்டறக் கலந்து விடும்போதுதான் அது அவரது உண்மைக்குச் சாட்சி பகரக்கூடியதாக இருக்கும். ஏனென்றால் இவ்வாறு கூறுவதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எவ்வகையிலும் இழிவு ஏற்படாது. மாறாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து பெறுகின்ற அருள்கள் மூலமாக நுபுவ்வத்தின் ஒளி இன்னும் அதிகமாக மிகவும் மகிமையுடன் வெளிப்படுகின்றது.

எனவே இந்தக் காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பதன் காரணமாகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி நடந்து அன்னாரின் மீது பேரன்பு கொண்டதன் மூலமாகவும் நபி என்ற தகுதியை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு வழங்கினான். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருந்ததன் காரணமாகத்தான் நபி என்ற தகுதி அவர்களுக்குக் கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது பேரன்பு கொண்டதன் விளைவாக இந்த உயர் தகுதி அவர்களுக்குக் கிடைத்தது. எனவே அவர்கள் நபியாவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்தைச் சார்ந்தவராக இருப்பது ஒரு கட்டாய நிபந்தனையாக இருக்கின்றது. பிறகு அல்லாஹ் அவர்களுக்கு தனது உதவிகளை வழங்கி அவர்களுக்கு ஆதரவாக அடையாளங்களைக் காட்டி, ஒரு உலகத்தின் கவனத்தை அவர்கள் பக்கம் திருப்பி விட்டான். அவர்களது வாதத்திலிருந்து ஆரம்பமான இந்தத்

தொடர் இன்று வரை நீடித்துக் கொண்டிருக்கின்றது. தொடராக இருந்து வரும் இந்த அருள்களிலிருந்து நல்லியல்பு கொண்ட மக்கள் பயனடைந்து வருகின்றார்கள். மேலும் அவர்கள் அன்னாரால் உருவாக்கப்பட்ட கப்பலில் பயணம் செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இங்கும் கூட தனது எஜமானரைப் பின்பற்றியவாறு எந்த அருள்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குக் கிடைத்ததோ அந்த அருள்களிலிருந்தும் உண்மையில் அவர்களுக்குப் பிறகு இறையுதவி வழங்கப்பட்ட அவர்களது கிலாஃபத்துடன் இணைந்திருப்பவர்களே பலன் பெறுகின்றார்கள். இன்றும் கூட நல்லியல்பு கொண்ட மக்களுக்கு அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது உண்மையைப் புரிவதற்கு வழிகாட்டுகின்றான்; வழிகாட்டிக் கொண்டிருக்கின்றான். இந்த வழிகாட்டுதலின் விளைவாக நல்லியல்பு கொண்ட மக்கள் ஜமாஅத்தில் இணைந்து கொண்டிருக்கின்றார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகு தோன்றிய அவர்களது கிலாஃபத்தும் உண்மையானது என்பதை நிரூபிப்பதற்காக உண்மையான கனவுகள் மூலமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடன் அவர்களது கலீஃபாக்களையும் அல்லாஹ் இவர்களுக்குக் காட்டியுள்ளான். இதன் மூலமாக அவர்களது ஈமான் இன்னும் வலுவடைகிறது. **இப்போது நான் சில சம்பவங்களை எடுத்துக் கூறுவேன். உண்மையான கனவுகள் மூலமாக ஜமாஅத்தில் இணைந்தவர்கள் தொடர்பான சில சம்பவங்களைக் கூறுவேன்.** உலகின் பல்வேறு நாடுகளைச் சார்ந்த மக்கள், பல்வேறு நிறங்களைக் கொண்ட மக்கள், பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் உண்மையான கனவுகளைக் கண்டு ஜமாஅத்தில் இணைந்துள்ளனர்.

கேம்பியாவிலுள்ள மெலிங்கரா என்ற கிராமத்தைச் சேர்ந்த மோதுநீஜே சாஹிப் அவர்களுக்கு 2003 ஆம் ஆண்டின் இறுதியில் நமது தாயீயீனே இலல்லாஹ் மூலமாக ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போது அவர் திஜானியா என்ற பிரிவுடன் ஆழமான தொடர்பு வைத்திருந்தார். இந்த திஜானியா என்ற பிரிவினர் பொதுவாக ஆப்பிரிக்காவில் எல்லாருக்கும் தெரிந்த பிரிவினர் ஆவார்கள். ஆனால் இவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றிய எந்த அறிவும் கிடையாது. பொதுவாக முஸ்லிம்கள் இருப்பது போலவே இவர்களும் முல்லாக்களின் அடிமைகளாக இருக்கின்றனர். முல்லாக்கள் கூறுவதையே இவர்கள் செய்து வந்தார்கள். இஸ்லாத்தைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது. போதைப் பழக்கத்திற்கு இந்த நபர் அடிமையாகி இருந்தார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக இவர் ஒரு கனவு கண்டார். அவர் கூறுகின்றார்: கனவில் ஒரு காட்டில் புதர்களில் உள்ள செடி கொடிகளை வெட்டிச் சுத்தமாக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். கனவிலேயே இதற்காக நான் கடுமையாக உழைத்த பிறகு அந்த இடத்தைச் சுத்தப்படுத்துவதில் நான் வெற்றி பெற்று விட்டேன் என்று கூறுகிறார். பிறகு அவர் ஒரு சுத்தமான வெண்மை நிறமாகக் காட்சி தரும் ஒரு ஒளி நிறைந்த இடத்தில் இருக்கின்றார். பிறகு கனவில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பெரியவரை அவர் பார்த்தார். அந்தப் பெரியவர் தனது தோழர்களுடன் இருப்பதைப் பார்த்தார். அந்தப் பெரியவர் அவரை தன் பக்கம் அழைத்தார். உங்களைச் சீர்திருத்திக் கொள்வது உங்களது நோக்கமாக இருக்கிறதென்றால் என்னிடம் வாருங்கள் என்று அந்தப் பெரியவர் அவரிடம் கூறினார்.

அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் நான் இதே போன்ற கனவை மூன்று முறை பார்த்துள்ளேன் என்று அவர் கூறுகின்றார். பிறகு அவரது உள்ளம் திறந்தது. அவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்.

அவர் பைஅத் செய்த பிறகு அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படமும் அவர்களது கலீஃபாக்களின் புகைப்படங்களும் காட்டப்பட்டது. அப்போது அந்தப் புகைப்படங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படத்தைப் பார்த்ததும் அவர் கனவில் தன் பக்கம் வரும்படி என்னை அழைத்த இறைவனது தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த கண்ணியமிக்க பெரியவர் இவர்தான் என்று கூறினார். அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு இவரிடம் ஒரு புரட்சி ஏற்பட்டது. தூய மாற்றம் அவரிடம் ஏற்பட்டது. ஐவேளை தொழும் பழக்கமுள்ளவராக மாறினார். திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொண்டார். மற்ற நல்ல திட்டங்களிலும் பங்கேற்றார். வயதில் பெரியவராக இருந்தாலும்

திருக்குர்ஆனை ஓதி முடித்த பிறகு மிகவும் ஆர்வத்துடன் ஆமீன் என்ற துஆ நிகழ்ச்சியையும் நடத்தினார். இதற்குப் பிறகு தனது குழந்தைகளுக்கும் ஏனைய அஹ்மதி குழந்தைகளுக்கும் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார். வயதில் பெரியவராக இருக்கும் நிலையில் தானும் திருக்குர்ஆனைக் கற்று பிறருக்கும் அதை கற்றுக் கொடுத்து வந்தார். அல்லாஹ்வின் அருளால் இப்போது இவர் வஸிய்யத் செய்துள்ளார். முறையாக தஹஜ்ஜுத் தொழுகையை தொழுபவராக இவர் இருந்து வருகின்றார். இவரது உறவினர்களும் இவரிடம் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை உணர்ந்துள்ளனர். இவரைப் பார்க்கும் போது இதற்கு முன்பு இருந்த அதே நபர் தான் இவர் என்பதில் எங்களுக்கு நிச்சய உறுதி ஏற்படவில்லை என்று அவர்களது உறவினர்கள் கூறுகின்றார்கள். அந்த அளவு மகத்தான புரட்சி அவரிடம் ஏற்பட்டிருக்கின்றது.

**உஸ்தாத்ஜீஸத்ஜீஸ் சாஹிப் என்ற ஆசிரியர் தொடர்பாக கேம்பியாவின் அமீர் சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள். அந்த ஆசிரியர் இவ்வாறு கூறினார்:**

நான் சிறு வயதில் கத்தோலிக் பிரெஞ்ச் ஸ்கூலில் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு வயது 10. அப்போது ஓர் இரவில் நான் ஒரு கனவு கண்டேன்.

சிறுவர்களுக்குக் கூட அல்லாஹ் எவ்வாறு வழிகாட்டுகின்றான் என்பதைப் பாருங்கள். அவர் கூறுகிறார்:

கனவில், ஒளி மிகவும் குறைவாக கண்ணுக்கு தென்படுகின்ற ஒரு பழைய வீட்டில் நான் தூங்கிக் கொண்டிருந்தேன். நான் அந்த வீட்டின் கூரையின் பக்கம் பார்த்த போது அங்கு கூரை இல்லாமல் இருந்தது. வானத்தில் எனக்கு ஒரு நபர் தென்பட்டார். சிவப்பு நிற போர்வையை அவர் போர்த்தியிருந்தார். தங்க நிறத்திலான தலைபாகை அணிந்தவராக அவர் இருந்தார். அந்த நபர் ஒளியின் வடிவமாகத் திகழ்ந்தார். அவரைச் சுற்றி ஒளிகளின் ஒரு வட்டம் தென்பட்டது. அவர் வானத்திலிருந்து என் பக்கம் வந்து கொண்டிருந்தார். அஹ்மதிகளாகிய நாம் தரூது ஓதுவது போன்று அந்த நபரும் தரூது ஓதிக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்த அதே தரூதை ஓதிக் கொண்டிருந்தார்.

**அவர் கூறுகின்றார்:** அதற்குப் பிறகு எனக்கு 16 அல்லது 17 வயது ஆனபோது கனவில் நான் பல புதர்களைக் கடந்து எல்லாராலும் கைவிடப்பட்ட ஒரு பழைய வீடு வரை வருவதைக் கண்டேன். ஆனால், இந்த தடவை வீடு பழுதுபார்க்கப்பட்டு பராமத்து வேலைகள் நடைபெற்று அந்த வீடு அழகாக அலங்கரிக்கப்பட்ட நிலையில் இருந்தது. அந்த வீட்டின் சுவர்கள் வெள்ளையாகவும் கதவுகளும், ஜன்னல்களும் பச்சை நிறத்திலும் இருந்தன. அப்போது கனவிலேயே இனி இந்த இடம் கைவிடப்பட்ட இடமாக இருக்கிறது என்ற உணர்வு ஏற்படுகின்றது. மாறாக அந்த வீட்டிற்கு கண்ணியமும் மரியாதையும் கொடுக்கப்பட்டிருப்பது எனக்கு தெரிய வருகிறது. அந்த வீட்டின் எஜமானர் அந்த வீட்டில் வருவதற்கு முன்னரே நான் அங்கிருந்து வெளியேறி விட விரும்பிய போது அந்த சமயத்தில் ஒரு பெரியவர் வெளியில் வந்து சப்தமாக என்னை அழைத்தார். நான் பயந்து அவரிடம் செல்ல மறுத்து விட்டேன். அந்த பெரியவர் மீண்டும் குரல் கொடுத்தார். நான் இந்த சமயத்தில் வரமாட்டேன். நீங்கள் யார் என்பதை கூறாதவரை நான் வரமாட்டேன் என்று கூறினேன். அதற்கு அந்தப் பெரியவர் நான் இறுதி நாட்களில் வருவேன். எனவே இப்போது நான் வந்துள்ளேன். நீர் அஞ்ச வேண்டாம் என்று கூறினார். இதைக் கேட்டு எனக்கு கொஞ்சம் தைரியம் வந்தது. நான் அந்தப் பெரியவருடன் சேர்ந்து ஒரு அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு Laboratory –ல் இருப்பது போன்ற சில கருவிகள் இருந்தன. இது என்னுடைய Laboratory ஆகும் என்று அந்தப் பெரியவர் கூறினார். நான் அந்தப் பெரியவரிடம் நீங்கள் இந்த வீட்டில் தனியாக சோகமாக வாழ்க்கையைக் கழித்துக் கொண்டிருக்கின்றீர்கள் என்று தெரிகிறது என்றேன். அதற்கு அந்தப் பெரியவர் நம்முடைய இந்தத் திட்டம் ஒவ்வொரு இடத்திலும் தனிமையில் இருக்கும் நபர்களுக்கு பலன் அளிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்த தனித்திருக்கின்ற எனக்குப் பிரியமான அனைவருடைய சபைகளிலும் நாம் இருப்போம் என்று கூறினார். இதற்குப் பிறகு நான் அந்தப் பெரியவரை விட்டுப் பிரிந்து விட்டேன்.

**தொடர்ந்து கூறுகின்றார்:** கனவிலிருந்து நான் கண்விழித்துப் பார்த்த போது அந்தப் பெரியவர் மீதுள்ள அன்பால் எனது கண்களில் கண்ணீர் வடிந்தது. மேலும் இந்தப் பெரியவர் மனித இனத்திற்குத் தொண்டாற்றியிருந்தும் அவரது தனிமையான வாழ்க்கை தொடர்பாக நான் கவலையடைந்தேன். பத்து ஆண்டுகள் கடந்த பிறகு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தை பார்த்த போது அது நான் கனவில் கண்ட அதே பெரியவராக இருப்பதைப் பார்த்தேன். அவர்கள் முதல் கனவில் வானத்திலிருந்து இறங்கி வந்தார்கள். இரண்டாவது கனவில் ஒரு பெரியவரின் தோற்றத்தில் அவர்கள் இருந்தார்கள்.

தன்ஸானியாவைச் சார்ந்த ஒரு நபர் முஹம்மது அலி சாஹிப் அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். வெள்ளை நிறத்தில் தோற்றமளித்த ஒரு பெரியவர் அவருக்கு தொழ வைத்தார். அந்த பெரியவருக்குப் பின்னால் தொழுததன் மூலமாக அவருக்கு ஒரு ஆன்மீகமான நிம்மதி கிடைத்தது. இந்தக் கனவு கண்ட சில நாட்கள் கழிந்த பிறகு அவர் நமது பள்ளிவாசலுக்கு வந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைப் பார்த்து விட்டு இந்தப் பெரியவர் தான் கனவில் எனக்கு தொழ வைத்தார் என்று கூறினார். பிறகு அப்போதே பைஅத்தும் செய்து விட்டார்.

பைஅத்திற்குப் பிறகு அவருக்கு பல துன்பங்களையும் கடிதங்களையும் சகித்துக் கொள்ள வேண்டியது வந்தது. இந்தக் கடினமான நிலை பாகிஸ்தானிலும் வேறு சில இடங்களில் மட்டும் இல்லை. சில நேரங்களில் ஆப்பிரிக்காவில் கூட இத்தகைய கடினங்கள் சகித்துக் கொள்ள வேண்டியதுள்ளது. அவரது தந்தை அவருக்குரிய சொத்தை அவருக்கு வழங்க மறுத்து விட்டார். அவருக்குரிய சிறிய நிலம் இருந்தது. அதிலிருந்தும் அவர் வெளியேற்றப்பட்டார். பிறகு அவர் அங்கிருந்து வெளியேறி வேறொரு இடத்திற்கு வந்தார். தந்தையார் அவரிடமிருந்து பறித்த அல்லது அவருக்கு கிடைக்க இருந்த நிலம் ஒரு ஏக்கர் நிலமாக இருந்தது. அவர் வேறிடத்திற்கு வந்த பிறகு அல்லாஹ் அந்த ஒரு ஏக்கர் நிலத்திற்குப் பதிலாக 6 ஏக்கர் நிலத்தை அவருக்கு வழங்கினான். மேலும் மனத்தூய்மையிலும் பற்றிலும் மேலும் அதிகமாக முன்னேறிச் செல்பவராக அவர் ஆகி விட்டார். தப்லீகிலும் மிகவும் முன்னேறிச் செல்பவராக அவர் திகழ்ந்தார். அல்லாஹ்வின் அருளால் இதுவரை இவரது தப்லீக் மூலம் அங்கு அவரது இடத்தில் 6 ஜமாஅத்துகள் நிறுவப்பட்டு விட்டன.

2003 -ல் புர்கினோஃபாஸோவில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும். தல்மியா என்ற கிராமத்தைச் சேர்ந்த கபூரா மூஸா சாஹிப் அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட சமயத்தில் தனது இந்தக் கனவைக் கூறினார். அவரது தந்தையார் தனது வாழ்நாளின் இறுதிப் பகுதியில் அவரை அழைத்து நீ இமாம் மஹ்தி பற்றிய செய்தியை கேள்விப்பட்டால் சாக்குப் போக்குகளைக் கூற ஆரம்பித்துவிடக் கூடாது. கவனமாக ஆராய்ந்து பார்த்து அவரை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருந்தார். இந்தப் போதனையைச் செய்த பிறகு விரைவிலேயே அவரது தந்தையார் மரணமடைந்து விட்டார்.

**அவர் கூறுகின்றார்:** அதற்குப் பிறகு நான் மிக அதிகமாக சிந்திக்க ஆரம்பித்தேன். அதிகமாக நஃபில் தொழுகைகளை தொழுது துஆ செய்ய ஆரம்பித்தேன். இறைவா! எனக்கு உண்மையைக் காட்டுவாயாக என்று வேண்டினேன். ஒரு நாள் கனவில் நான் ஒரு நகரத்தின் பக்கம் செல்வதைப் பார்த்தேன். அந்த நகரத்தில் எல்லா மக்களும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. நான் ஒருவரிடம் ஏன் சண்டை போடுகின்றீர்கள்? என்று கேட்டேன். எனது குரலைக் கேட்டு அவர் என் பக்கம் திரும்பினார். பிறகு பாருங்கள். இவரை இதுவரை யாரும் அடிக்கவில்லை. இவரையும் அடியுங்கள் என்று கூறினார். அப்போது அந்தக் கூட்டம் என் பக்கம் முன்னேறி வந்தது. அவர்கள் என்னை அடிக்க இருந்தார்கள். அப்போது ஒரு பெரியவர் ஒரு குழந்தையைத் தூக்குவது போல் என்னை தூக்கிக் கொண்டார். அந்தக் கூட்டத்திலிருந்து என்னை தூக்கிச் சென்று அந்த அபாயத்திலிருந்து காப்பாற்றி என்னை அங்கிருந்து வெகுதொலைவில் கொண்டு சென்று விட்டார். மிக அகலமான ஒரு தெருவில் என்னை வைத்தார். அது மிகத் தொலைவில் வரை நன்றாக எனக்கு தெரிந்தது. நான் அந்த தெருவில் செல்ல ஆரம்பித்தேன். சிறிது தொலைவில் ஒரு பள்ளிவாசல் எனக்கு தென்பட்டது. நான் அந்த பள்ளிவாசலுக்குள் நுழைந்தேன். அங்கு தொழுகையாளிகளை தவிர அரபு நாட்டைச் சேர்ந்தவர்களும் தப்லீக் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்தக் கனவைக் கண்ட பிறகு அங்கிருந்த நமது மிஷன் ஹவுஸிற்கு அவர் வந்த சமயத்தில் அங்கு வெள்ளை நிறத்தில் இருந்த நமது பள்ளிவாசலைப் பார்த்தார். அங்கிருந்த தொழுகையாளிகளையும் பார்த்தார். பாகிஸ்தானைச் சார்ந்த இரண்டு நபர்களையும் பார்த்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படம் அவருக்கு காட்டப்பட்ட போது மிகவும் உணர்வு பொங்க இறைவன் மீது ஆணையாக! ஆபத்தான நேரத்தில் என்னை அந்தக் கூட்டத்திலிருந்தும் காப்பாற்றிக் கொண்டு சென்ற அந்த பெரியவர் இவர்தான் என்று கூறினார். இவர் இதற்குப் பிறகு பைஅத் செய்து விட்டார். இவர் அந்தக் கிராமத்தின் இமாமாக இருந்ததால் அவர் பைஅத் செய்த பிறகு அதிகமான எண்ணிக்கையில் கிராமத்திலிருந்து மக்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

செனிகலில் உள்ள காஸாமான்ஸ் என்ற பகுதியில் ஒரு பீர் சாஹிப் பைஅத் செய்துள்ளார். இவரை ஏற்றுக் கொண்டவர்கள் 132 இடங்களில் இருக்கின்றார்கள். இந்தப் பீர் சாஹிப் ஒரு கனவின் அடிப்படையில்தான் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார். அவர் ஜுமுஆ பள்ளிவாசலில் திருக்குர்ஆனை கையில் ஏந்தியவாறு சத்தியம் செய்து இவ்வாறு கூறினார். நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவைக் கண்டு பல ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனால், இந்தக் கனவோடு தொடர்புடைய ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களைத் தேடிக் கொண்டிருந்தேன். இப்போது இறைவன் அருளால் அவர் எனக்கு கிடைத்து விட்டார். அந்தக் கனவு இதுதான்.

**அவர் கூறுகின்றார்:** கலிமா தய்யிபா லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதர் ரஸூலுல்லாஹ் பூமியில் வீழ்ந்து கிடைப்பதை நான் பார்க்கின்றேன். எல்லா வலிமார்களும் பெரியோர்களும் ஒன்றுசேர்நது அதை உயர்த்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள். ஆனால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. அப்போது அந்த சமயத்தில் ஒரு பெரியவர் அங்கு வந்தார். அவர் தொடர்பாக அவரது பெயர் முஹம்மது அல் மஹ்தி என்று கூறப்பட்டது. அவர் வந்து தனியாக அந்தக் கலிமாவை உயர்த்தி விட்டார்.

பீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அவரது பகுதியில் அவர்கள் பயணம் மேற்கொண்ட போது அவர்களது வீட்டிற்கும் அவர்கள் சென்றார்கள்.

அல்லாஹ் மிகவும் தொலைவிலுள்ள பகுதிகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மையை மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகத்தான் கலிமாவின் உண்மை உலகிற்கு தெரிய வருகிறது.

இன்றைய ஆலிம்கள் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி விட்டார்கள்.

அல்ஜீரியாவைச் சேர்ந்த ஒரு நண்பர் அப்துல்லாஹ் ஃபாத்திஹ் சாஹிப் அவர்கள் மிஷன் ஹவுஸிற்கு வந்தார்கள். கேள்வி பதில் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கூட்டம் முடிகின்ற சமயத்தில் அவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களான குத்பா இல்ஹாமிய்யா, அல் ஹுதா ஆகியவை படிப்பதற்காக கொடுக்கப்பட்டன. அதைப் படித்துப் பார்த்த பிறகு இந்த எழுத்துக்கள் ஒரு பொய்யருடைய எழுத்துக்களாக இருக்க முடியாது என்று கூறினார். அத்துடன் ஒரு துணியைத் தலையில் தலைப்பாகை போன்று மடித்து அணிந்தவாறு நான் சில நாட்களுக்கு முன் ஒரு நபரைக் கனவில் பார்த்தேன். அவரது முகம் மிகவும் ஒளிமயமானதாக இருந்தது. அவர் தனது தலையில் இவ்வாறே துணியைத் தலைப்பாகையாகக் கட்டியிருந்தார் என்று கூறினார். அப்போது அவருக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது புகைப்படம் காட்டப்பட்டது. ஆனால் அவர்கள் யார் என்று அவருக்குக் கூறப்படவில்லை. புகைப்படத்தைப் பார்த்ததும் எழுந்து நின்றவாறு நான் கனவில் கண்ட அதே நபர் தான் இவர் என்று கூறினார். பிறகு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்.

**பின்லாந்தில் ஒரு அரபு நாட்டைச் சார்ந்த சகோதரர் ஒருவர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்:**

மூன்று வருடங்களுக்கு முன்பு எனது தந்தையார் வஃபாத் ஆனார்கள். அவர்கள் வஃபாத் ஆகி சில மாதங்கள் கடந்த பிறகு நான் இந்தக் கனவைப் பார்த்தேன். கனவில் எனது தந்தையார் கபரில் உறங்கிக்

கொண்டிருக்கின்றார். அப்போது அந்த கபர் உயர்ந்து வந்தது. அதிலிருந்து கண்ணியமிக்க ஒரு பெரியவர் ஜிப்பா அணிந்த நிலையில் வெளியே வந்தார். அவரது தலைமுடி கருப்பாகவும் முகம் ஒளிமிக்கதாகவும் அது நன்மைகளையும் அருள்களையும் பிரதிபலிக்கக்கூடியதாகவும் இருந்தது. அங்கு அவரது பெயரும் எழுதப்பட்டிருந்தது. அது எனக்கு சரியாக ஞாபகத்தில் இல்லை. இந்தப் பெரியவர் கபரிலிருந்து வெளியில் வந்ததும் எனது வலது கையைப் பிடித்து கபரின் மற்ற பக்கத்திற்கு என்னை கொண்டு சென்றார். நான் அந்தப் பெரியவருடன் இணைந்தவாறு சென்று கொண்டிருந்தேன். பிறகு எனது தந்தையாரின் முகமும் எனக்கு தெரிந்தது.

**அவர் கூறுகின்றார்:** இந்தக் கனவு கண்டு ஆறு மாதங்கள் கழிந்த பிறகு நான் டிஷ்ஷின் சேனல்களைத் தேடிக் கொண்டிருந்த போது திடீரென்று M.T.A. பார்த்தேன். அந்தக் காட்சியும் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் ஹில்மி சாஹிப் அவர்களும் இருந்தார்கள். சில நாட்கள் கழிந்த பிறகு அந்த நிகழ்ச்சியில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் (ரஹி) அவர்கள் ஒரு பெரியவரின் புகைப்படத்தைக் காட்டினார்கள். அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படமாகும். அந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் எந்தப் பெரியவரை நான் கனவில் கண்டேனோ இவர் அவர் தான் என்பதை நான் அடையாளம் கண்டு கொண்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

செனிகலில் ஒரு புதிய அஹ்மதி கனவில், வானத்தில் இரண்டு பெரியவர்களின் புகைப்படத்தைப் பார்த்தார். அவரது எண்ணத்தில் இதில் ஒரு புகைப்படம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகைப்படம் என்றும், மற்றொன்று ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் புகைப்படம் என்றும் இருந்தது. ஆனால் அவ்வாறு புகைப்படங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகைப்படம் எது என்பது அவருக்கு தெரியவில்லை. பிறகு அவ்விரு புகைப்படங்களில் ஒன்று மறைந்து விடுகிறது. இன்னொரு புகைப்படமும் மிக அருகில் வந்து விடுகிறது. பக்கத்தில் வந்த அந்த வடிவம் நான் தான் இமாம் மஹ்தி என்று கூறுகிறது. இந்தக் கனவைக் கண்ட பிறகு இக்கனவைக் கண்ட செனிகலைச் சார்ந்த உமர் பா சாஹிப் அவர்களுக்கு இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என்பதில் உறுதி ஏற்பட்டது.

அங்குள்ள முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: நமது குழுவினர் தப்லீகின் போது அவரிடம் சென்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தை அவருக்குக் காட்டியபோது இதே புகைப்படம் தான் எனக்கு கனவில் காட்டப்பட்டது என்று கூறினார். அதற்குப் பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

சிரியாவில் ஒரு சகோதரருக்கு அஹ்மதிய்யத் தொடர்பான அறிமுகம் கிடைத்த போது அது பற்றி ஆராய்ந்து பார்க்க அவர் துவங்கிய போது முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை அவர் படிக்க ஆரம்பித்தார். அவர் கூறுகின்றார்:

நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் எல்லா அரபி நூல்களையும் படித்து முடித்தேன். அதிலிருந்தும் அதிகமாக பயன் பெற்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வார்த்தைகள் மந்திரம் போல என்னில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. இதற்குப் பிறகு நான் இஸ்திகாரா செய்தேன். அப்போது ஒரு முறை இந்த வசனம் எனக்கு கேட்டது. அத்துடன் எனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காணும் நற்பேறு கிடைத்தது. இந்த வசனத்தின் பொருள்:

நமது அடியார்களின் ஒரு அடியாருக்கு நாம் நம் தரப்பிலிருந்தும் கருணையை வழங்கியுள்ளோம். மேலும் நம் தரப்பிலிருந்தும் குறிப்பான அறிவையும் அவருக்கு வழங்கியுள்ளோம்.

பிறகு **அவர் கூறுகின்றார்:** எனக்கு மீண்டும் இரண்டாவது முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காண முடிந்தது. அப்போது நான் கேட்டதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்தக் காலத்திலுள்ள குழப்பங்களிலிருந்து தப்பிப்பதற்காக மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் மட்டும் நம்மை பாதுகாக்கின்ற கப்பல் ஆவார்கள் என்று கூறினார்கள். அவர் கூறுகின்றார்: பிறகு நான் என் மனைவியிடம் இஸ்திகாரா செய்யும்படி கூறினேன். எனது மனைவிக்கு கனவில் ஒருவர் வந்து மிர்ஸா குலாம்

அஹ்மத் இந்தக் காலத்தின் முஜத்தித் ஆவார் என்று கூறினார். ஆனால் இந்த கனவைக் கண்ட பிறகும் அவருக்கு மனநிறைவு ஏற்படவில்லை. அவர் பைஅத் செய்யவில்லை. அவர் கூறுகின்றார்:

நான் உள்ளத்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மையை ஏற்றுக் கொண்டேன். ஆனால் என்னோடு இணைந்திருக்கின்ற சகோதரர்களுக்கு சுயமாக சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காக நான் இது பற்றி அறிவிக்காமல் இருந்தேன். சிந்தித்துச் செயல்படாமல் என்னைப் பின்பற்றியவாறு அவர்கள் வரக்கூடாது என்பதற்காகவே அவ்வாறு செய்தேன்.

இறுதியில் 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் இவர் தனது ஐந்து நண்பர்களுடன் பைஅத் செய்தார்.

ஐவரிகோஸ்டில் உள்ள சினாலா என்ற கிராமத்தில் உள்ள பீமா சாஹிப் என்பவர் மக்களுக்கு முன்னால் ஒரு வியப்பூட்டும் சம்பவத்தைக் கூறினார். அவர் கூறுகின்றார்:

கடந்த இருபது வருடங்களுக்கு முன் நான் கடுமையாக நோய்வாய்ப் பட்டிருந்தேன். எனக்கு வலிப்பு நோய் இருந்து வந்தது. இயன்ற அளவு சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால் சிறிதளவு கூட குணம் கிடைக்கவில்லை. நகரத்தில் இருந்த சிலர் தஃவீஸ் கயிறுகளைக் கொடுத்து இதனை உனது இடுப்போடு சேர்த்து கட்டு என்று கூறினார்கள். இதுதான் நோய்க்கான சிகிச்சையாகும் என்று கூறினர். இந்த நாட்களில் கஷ்ஃப் காட்சியில் ஒரு பெரியவர் என்னிடம் வந்து இது நீங்கள் என்ன அணிந்துள்ளீர்கள்? இதை வெட்டி எறியுங்கள் என்று கூறினார். எனது உள்ளத்தில் மிகவும் வேகமாக இந்தப் பெரியவர் இமாம் மஹ்தி ஆவார்கள் என்ற உணர்வு உருவானது. நான் எனது இடுப்பில் கட்டியிருந்த தஃவீஸ் கயிறுகளை அவிழ்த்து விட்டேன். அதே நாளில் அல்லாஹ் எனக்கு குணம் அளித்தான். அந்த நாளிலிருந்து இன்று வரை எனக்கு ஒருபோதும் வலிப்பு நோய் ஏற்பட்டதேயில்லை. நான் அந்த நாளிலேயே இமாம் மஹ்தியை ஏற்றுக் கொண்டு அவர்களைத் தேடிக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்து இமாம் மஹ்தி பற்றி பேசிய போது இமாம் மஹ்தி எனக்கு கிடைத்து விட்டார் என்று நான் புரிந்து கொண்டேன்.

நமது முபல்லிக் இவருக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது புகைப்படத்தையும் அவர்களின் கலீஃபாக்களின் புகைப்படங்களையும் காட்டினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படத்தைப் பார்த்ததும் எனது கனவில் என்னை சந்தித்த பெரியவர் இவரே தான் என்று அவர் கூறினார். அவர்கள்தான் தஃவீஸ் கயிறுகளை அணிவதிலிருந்தும் என்னை தடுத்தார்கள் என்று கூறினார். இந்தப் பீர்மார்களும் ஃபக்கீர்மார்களும் இப்படிப்பட்ட புதிய விஷயங்களை மார்க்கத்தில் புகுத்தி விட்டனர். இவற்றை அகற்றி ஒரு முடிவுக்கு கொண்டு வரவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்துள்ளார்கள். அதனால் அவர்களுக்கு மஹ்தி என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**அபூதாபியிலிருந்து ஒருவர் எழுதுகிறார்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்கள் எந்த அளவு எனக்குக் கிடைத்ததோ அவற்றைப் படித்ததன் மூலமாகவும் M.T.A. வில் நிகழ்ச்சியாகிய அல்ஹிவாருல் முபாஸிராவை தொடர்ச்சியாக பார்த்தன் மூலமாக எனக்கு ஜமாஅத்தில் கொள்கைகள் பற்றிய தகவல்கள் கிடைத்தன. கடந்த காலத்தில் இருந்து வந்த எண்ணங்களின் காரணமகவும் அறியாமையின் காரணமாகவும் துவக்கத்தில் நான் இவற்றை மறுக்கும் எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்திக் காட்டினேன். ஆனால் திருக்குர்ஆனையும் நபிமொழிகளையும் இறைவனின் நடைமுறையையும் கவனமாகச் சிந்தித்துப் பார்த்தால் அதன் மூலமாக எனது உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்தது. இப்போது எனக்கு முன்னால் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, நான் தொடர்ச்சியாக மர்யமின் மகன் ஈஸா வானத்திலிருந்து இறங்குவார் என்று எதிர்பார்த்தவாறு காத்திருக்க வேண்டும். அதற்கு முன்னால் தஜ்ஜாலுக்காக காத்திருக்க வேண்டும். இறைவனுக்கு மட்டுமே பொருந்துகின்ற சில பண்புகள் தஜ்ஜாலுக்கு இருப்பதாக கூறப்படுகிறது. உதாரணமாக மரணித்தவர்களுக்கு உயிரூட்டுவது உள்ளது. ஜின்கள் பூதங்கள் ஆகியவற்றின் கதைகளுடனும் திருக்குர்ஆனில் நாஸிக் மன்சூக் உள்ளன என்ற கொள்கையுடனும் நான் இணைந்திருக்க வேண்டுமா அல்லது ஹஸ்ரத் அஹ்மத் (அலை) அவர்களை

வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இமாம் மஹ்தியாகவும் ஏற்றுக் கொள்வதா? அவர்கள் தான் இஸ்லாத்தில் புதியவை புகுத்தப்படுவதிலிருந்தும் தூய்மையாக்கி இஸ்லாத்தின் அழகிய முகத்தை பொலிவுடன் நமக்கு காட்டித் தந்தார்கள். அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக செய்யப்படும் ஆட்சேபனைகளை தடுத்து நிறுத்தினார்கள். இவ்வாறெல்லாம் சிந்தித்து நான் இறைவனிடம் உதவி கோரியவாறு அதிகமாக துஆ செய்தேன். அல்லாஹ் எனக்கு வழிகாட்டலை வழங்கி உண்மை மற்றும் தனது திருப்தியில் வழிகளில் என்னை வழிநடத்திட அவனிடமே கேட்டேன். இதற்குப் பிறகு அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பக்கமும் எனது உண்மை சாய்வதை நான் உணரத் தொடங்கினேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதியிருந்த கவிதைகளைக் கேட்டதும் எனது உடல் நடுங்க ஆரம்பித்தது. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது. இப்படிப்பட்ட கவிதைகளை இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறுபவரால் கூற முடியாது என்று நான் உணர்வு பொங்கக் கூறினேன். இறைவன் மீது இட்டுக்கட்டிப் பொய் கூறுகின்ற ஒருவரது நெஞ்சத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இந்த அளவு நேசம் எப்படி இருக்க முடியும்? அரபியல்லாத ஒருவர் இந்த அளவு வலுவாகச் சொற்செறிவும் பொருட்செறிவும் நிறைந்த அரபுச் சொற்களைப் பயன்படுத்துவது இறைவனின் உதவியின்றி சாத்தியமற்றது என்பதை உணர்ந்தேன். இவ்வாறு அவர் நேர்வழியைப் பெறுவதற்கான ஏற்பாட்டை இறைவன் செய்தான்.

சிரியாவிலிருந்து ஒருவர் எழுதியுள்ளார். நான் மிகச் சாதாரணமான மனிதன் ஆவேன். எனக்குப் படிக்கவோ எழுதவோ முடியாது. என்னிடம் எந்த வசதியும் இல்லை. கடந்த நான்கு மாதங்களில் நான் பல கனவுகளைப் பார்த்துள்ளேன். அதில் எனது ரூஹ் கைப்பற்றப்படுவதை நான் பார்த்தேன். இறுதியாக நான் கண்ட கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தர்தூஸ் நகரிற்கு வந்திருப்பதைக் கண்டேன். அவர்கள் எங்கள் வீட்டிலிருந்த ஒரே அறையில் அமர்ந்திருந்தார்கள். உண்மையில் அந்த அறைக்கு ஒரு கதவு மட்டும்தான் இருந்தது. ஆனால் கனவில் எனக்கு இரண்டு கதவுகள் தென்பட்டது. ஒன்று கிழக்கு நோக்கியும் மற்றொன்று கிப்லா நோக்கியும் இருந்தது. எனது தந்தையார் கதவருகில் நின்றவாறு என்னிடம் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூறு என்று கூறினார்கள். நான் அவர்களுக்கு ஸலாம் கூறினேன். பிறகு அவர்களை முஸாபா செய்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தரப்பிலிருந்தும் வந்த குளிர்ந்த காற்றின் குளிர்ச்சி எனது உள்ளத்தில் நுழைந்தது. அதன் மூலமாக உள்ளத்திற்கு நிம்மதி கிடைத்தது. நான் எனது பார்வையை உயர்த்திப் பார்த்த போது ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்வையில் ஒன்றியிருப்பதைப் பார்த்தேன்.

அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வது தொடர்பாக நான் இஸ்திகாரா செய்த சமயத்தில் இறைவனிடம், இறைவா! நான் ஒரு சாதாரண படிக்காத மனிதனாவேன். எனக்கு உண்மையைக் காட்டுவாயாக என்று துஆ செய்தேன். அதற்குப் பிறகு இறைவன் எனது செயல்களை எனக்கு காட்டினான். அவை நல்ல செயல்களாக இருக்கவில்லை. ஏனென்றால் அப்போது நான் தொழுகைகளைக் கூட முறையாக நிறைவேற்றுபவனாக இருக்கவில்லை. அதற்குப் பிறகு நான் என்னை எனது தாயாருடன் கபருஸ்தானில் பார்த்தேன். ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள் எனது ரூஹைக் கைப்பற்ற வந்துள்ளார்கள். அவர்கள் எனது கழுத்தில் ஒரு அடி கொடுத்தார்கள். அதனால் எனது கழுத்தில் ஒரு முத்திரையின் அடையாளம் பதிந்து விட்டது. அதற்குப் பிறகு நான் அங்கிருந்து சென்று விட்டேன். அதற்குப் பிறகு நான் ஒரு இளைஞரைப் பார்த்தேன். அவரிடம் நான் மிகுந்த வியப்போடு எனது கழுத்தில் இமாம் மஹ்தியின் முத்திரை பதிந்து விட்டது என்று கூறினேன். இதைக் கேட்ட அவர் இந்த அடையாளம் எனது கழுத்திலும் இருக்கின்றது. மேலும் இது பைஅத்தின் முத்திரையாகும் என்று கூறினார்.

**அல்ஜீரியாவைச் சார்ந்த ருக்கூக் சாஹிப் எழுதுகின்றார்:**

ஒரு நாள் நான் டிவி. பார்த்துக் கொண்டிருந்தேன். திடீரென்று உங்கள் சேனலைப் பார்த்தேன். கிறிஸ்தவர்களை நீங்கள் எதிர்கொள்வதைப் பார்த்து உங்களது ஜமாஅத் உண்மையில் இருக்கின்றது என்று எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. அப்போது நான் என் இறைவனிடம் நான் இந்த ஜமாஅத்தின் மீது ஈமான் கொள்கின்றேன். இதன் உண்மையை எனக்கு கனவில் வெளிப்படுத்திக் காட்டுவாயாக என்று துஆ செய்தேன்.

பிறகு நான் கனவில் நாஸிர் சலாஹுத்தீன் கிறிஸ்தவர்களை எதிர்த்து நிற்பதில் ஒரு ஜமாஅத்திற்கு தலைமை தாங்கி வழிநடத்துவதைப் பார்த்தேன். பிறகு திடீரென்று வானம் பிளந்தது. அப்போது நான் உங்களது மொபைலைத் திறந்து பாருங்கள் என்ற ஒரு குரலைக் கேட்டேன். அந்த மொபைலில் ஒரு நம்பர் வரும். அந்த வருடத்தில் இஸ்லாம் எல்லா மார்க்கங்கள் மீதும் வெற்றி பெற்று விடும். இஸ்லாம் முழு உலகிலும் பரவி விடும் என்று என்னிடம் கூறப்பட்டது. நான் மொபைலைத் திறந்து பார்த்தேன். அதில் 2150 என்ற நம்பர் இருந்தது. அப்போது நான் இந்த விஷயம் 2150 ஆம் ஆண்டில் நிறைவேறும் என்று கருதினேன். பிறகு எனக்கு மீண்டும் தூக்கம் வந்தது. அந்த சமயத்தில் நான் எனது கடிகாரத்தைப் பார்த்தேன். அந்த டிஜிட்டல் கைக்கடிகாரத்தில் நேரம் வந்தது. அதுவும் 21:50 ஆக இருந்தது. அதாவது அப்போது இரவு 9 மணி 50 நிமிடங்களாக இருந்தது.

அவர் கூறுகின்றார்: ஏழு மாதங்களுக்கு முன் நான் பைஅத் செய்தேன். அப்போதிருந்தே நான் நோன்பு நோற்று வருகிறேன். நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முல்லாக்கள் மீதும் உலமாக்கள் மீதும் கோபம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சுட்டிக்காட்டியவாறு மிகவும் கடுமையான தொனியில் இவர் ரஸூல் ஆவார். எனக்குப் பிறகு வரும் நபியாவார் என்று கூறினார்கள்.

இவ்வாறு மிகத் தொலைவிலுள்ள பகுதியில் வாழும் ஒரு நபர் துஆ செய்த போது அல்லாஹ் அவருக்கு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை அவருக்கு வெளிப்படுத்திக் காட்டினான்.

**அல்ஜீரியாவைச் சார்ந்த ஹதாத் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

2004 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் ஒரு நபர் என் கனவில் வந்து வா நான் உன்னை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்ப்பதற்காக அழைத்துச் செல்கிறேன் என்று கூறுகின்றார். ஏறக்குறைய ஒரு மீட்டர் அளவு உயரமான சுவருக்குப் பின்னால் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் நிற்கின்றார்கள். அவர்கள் என்னைப் பார்த்து புன்சிரித்தார்கள். பிறகு நான் பார்த்தேன். ஹுஸூர் (ஸல்) அவர்களுக்கும் சுவருக்கும் இடையில் கோதுமை நிறத்தையுடைய ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு அடர்த்தியான கறுப்பு தாடி இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரைச் சுட்டிக்காட்டியவாறு இவர் அல்லாஹ்வின் தூதராவார் என்று கூறுகின்றார்கள். பிறகு அவர்கள் கிழக்குப் பக்கமாக ஒரு ஒளியின் பக்கம் சென்று விடுகின்றார்கள். ஆனால் மற்ற நபர் இன்னொரு இடத்தில் நின்று கொண்டிருந்தார்.

அவர் கூறுகின்றார்: நான்கு வருடங்கள் கழிந்த பிறகு 2008 ஆம் ஆண்டில் திடீரென்று உங்களது சேனலைப் பார்த்தேன். அதில் கனவில் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பார்த்த அந்த நபரின் படம் தெரிந்தது. அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் படமாகும். நான் அப்போதே பைஅத் செய்து விட்டேன்.

பிறகு குர்திஸ்தானி சம்சுத்தீன் சித்தீக் சாஹிப் கூறுகின்றார்:

25 வருடங்களுக்கு முன்னர் நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சந்திரனுக்குள் அமர்ந்தவாறு வானத்திலிருந்து இறங்குவதைப் பார்த்தேன். இப்போது M.T.A.பார்த்து எனக்கு உறுதி ஏற்பட்டு விட்டது. சந்திரனிலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இறங்குகின்றார்கள் என்பதன் விளக்கம் இந்த M.T.A.தான் என்பது புரிந்து விட்டது. அதனால் நான் இப்போது பைஅத் செய்ய விரும்புகின்றேன் என்று அவர் எழுதியுள்ளார்.

**ஈராக்கிலிருந்தும் அப்துர் ரஹீம் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

சில நாட்களுக்கு முன் நான் கனவில் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னிடம், நீ எமது ஆளாவாய். எனவே நீர் பைஅத் செய்து விட வேண்டும் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு அவர் எனக்கு கடிதம் எழுதினார். அதில் நான் உங்கள் கைகளில் பைஅத் செய்ய விரும்புகின்றேன். அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று எழுதியிருந்தார்.

**எகிப்திலிருந்தும் முஹம்மது அஹ்மது சாஹிப் எழுதுகின்றார்:**

பைஅத் செய்வதற்கு முன் நான் இருள்களில் திரிந்து கொண்டிருந்தேன். ஏனென்றால் இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் எத்தகைய ஃபத்வாக்களை கொடுக்கின்றார்கள் என்றால் அவற்றை அறிவு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. ஒரு சீர்திருத்தவாதி வர வேண்டும் என்பதை இவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருந்தாலும், அதற்காக துஆவும் இவர்கள் செய்த பிறகும் கூட முஸ்லிம்களின் நிலை வீழ்ச்சியின் பக்கமே சென்று கொண்டிருக்கிறது. மற்ற முஸ்லிம்களைப் போன்றே நானும் பல்வேறு சந்தேகங்களுக்கும் சலனங்களுக்கும் கைதியாக இருந்தேன். நான் ஏன் தொழ வேண்டும்? நான் ஏன் முஸ்லிமாக இருக்கின்றேன்? இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த ஒருவன் இருக்கின்றானா? இல்லையா? முஸ்லிம்களிடையே ஒற்றுமை எப்படி ஏற்படும்? என்ற கேள்விகளுக்கு எல்லாம் எங்குமே எனக்குப் போதுமான திருப்திகரமான பதில்கள் கிடைக்கவில்லை. நான் பல்வேறு சேனல்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஒருவேளை கிறிஸ்தவத்தில் இதற்கான தீர்வு இருக்குமா? என்றும் நினைத்தேன். ஆசியாவிலுள்ளவர்கள் இதற்கு தீர்வு காண்பார்களா? என்றும் நினைத்தேன். அப்போது திடீரென்று எனக்கு M.T.A. அல் அரேபியா தெரிந்தது. அதில் முஸ்லிம்களை ஒத்திருக்கும் சிலர் எனக்கு தென்பட்டனர். அவர்களது பேச்சுக்கள் இதுவரை நான் கேட்டிராதவையாக இருந்தாலும் அவை திருக்குர்ஆனுக்கு ஏற்பவே இருந்தது. இவர்களது சேனல் இஸ்லாமிய சேனலாக இருந்தாலும் இவர்களது இஸ்லாம் இதுவரை கேட்டிராத ஒன்றாக எனக்கு இருந்தது. இமாம் மஹ்தி தோன்றி விட்டார். அவர் தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆவார். அவர் தான் தஜ்ஜாலைக் கொள்பவர் ஆவார். அவரே திருக்குர்ஆனின் ஒளியின் மூலம் நெறி நீதி தீர்ப்பவராக இருப்பார். இறைவனின் வஹியின் மூலம் மஹ்தி என்ற பட்டத்தை பெறக்கூடியவராக அவர் இருப்பார். வஹியின் தொடர் துண்டிக்கப்படவில்லை என்றெல்லாம் அதில் கூறப்பட்டது. நான் இந்த விஷயங்களை ஆழமாக சிந்தித்துப் பார்த்ததன் விளைவாக சில நாட்கள் வரை எனக்கு தலை சுற்ற ஆரம்பித்தது. நான் என்ன கேட்கின்றேன்? என்று நான் என்னிடம் கேட்டுக் கொண்டேன். இறுதியில் எனது உள்ளம் மேலும் இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும் என்று ஃபத்வா கொடுத்தது. ஆலிம்கள் என்று தங்களைப் பற்றி கூறுகின்ற பலரும் இவர்களை காஃபிர்கள் என்று கூறுகின்றார்களே என்ற எண்ணமும் எனக்கு இருந்தது.

பிறகு அவர் ஆராய்ந்து பார்த்துக கொண்டிருந்தார். ஆலிம்களிடம் இது தொடர்பாக கேட்டார். இவர்கள் காஃபிர்கள் என்று அவர்கள் கூறினார்கள். எல்லா நபிமார்களும் பொய்யர்கள் என்றே அழைக்கப்பட்டுள்ளனர் என்ற எண்ணமும் எனக்கு வந்தது. அவர்கள் மந்திரவாதிகள் என்றும் பைத்தியக்காரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இந்த உம்மத் பல பிரிவுகளாகப் பிரிந்து விடும் என்று கூறியுள்ளார்கள். இஸ்லாம் ஏழ்மையின் நிலையிலேயே துவங்கியது. மீண்டும் அது ஏழ்மைக்கே திரும்பி விடும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். ஆலிம்கள் அதிகமாக இருப்பார்கள். ஆனால் மார்க்க சட்டம் அறிந்த புகாராக்கள் குறைவாகவே இருப்பார்கள் என்ற முன்னறிவிப்பும் இருக்கின்றது. இவ்வாறான துன்பங்கள் எல்லாம் இருந்தும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களைப் பின்பற்றி நடப்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். அவர் கூறுகின்றார்:

இறுதியில் நான் இறைவனிடம் உதவி கேட்டேன். அதற்காக துஆ செய்தேன். தொழுகைகளை தொழ ஆரம்பித்தேன். திருக்குர்ஆனை அதிகமாக ஓத ஆரம்பித்தேன். பிறகு எனக்கு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இறைவனின் அருளால் ஒரு ஜமாஅத்தை உருவாக்கியுள்ளார்கள். அதற்கு அவர்கள்தான் இமாமாக இருக்கின்றார்கள் என்றும் எனக்கு தெரிய வந்தது. சொல்லிலும் செயலிலும் இந்த ஜமாஅத்தின் முன்மாதிரியாக ஹஸ்ரத் காத்தமுன்னபிய்யீன் (ஸல்) அவர்கள்தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இஸ்லாத்தின் உண்மையை வலியுறுத்தி வந்தார்கள். மேலும் பல்வேறு கூற்றுக்கள், கருத்துக்கள் ஆகியவற்றில் எது சரியானதோ அதையே அவர்கள் கடைபிடித்தார்கள். மற்றவை அனைத்தும் தவறானவை என்பதை நிரூபித்தார்கள். இந்த விஷயங்களை நான் சிந்தித்துப் பார்த்த போது இவை அனைத்தும்

தூய்மையானதும் நிரூபிக்கப்பட்ட உண்மைகளும் ஆகும் என்று எனக்கு தெரிந்தது. இதை ஒரு பொய்யான நபரால் கூற முடியாது என்று நான் கருதினேன்.

பிறகு இந்த விஷயங்களின் பக்கம் நான் திரும்பி விட்டேன். மேலும் இதைத்தான் திருக்குர்ஆனும் கூறியுள்ளது. இதைத்தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் கூறியுள்ளார்கள். சஹாபாக்களும் இதன் மீதே ஈமான் கொண்டிருந்தார்கள். இதுதான் சுன்னத்திலிருந்தும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பல நபிமொழிகளிலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஆதரவாக இருப்பதை நான் பார்த்தேன். தனது முன்னோர்கள் மற்றும் தனக்குப் பிறகு வந்தவர்களின் நூல்களைப் படித்துப் பார்க்காத ஒரு முஸ்லிமுக்கு இந்த விஷயங்கள் புதியதாகத்தான் தெரியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஆதாரங்கள் சரியானதும் வலுவானதும் ஆகும்.

**அவர் கூறுகின்றார்:** பிறகு இறுதி முடிவு எடுப்பதற்காக நான் இஸ்திகாரா செய்தேன். 2007 ஆம் ஆண்டு ரமலான் மாதத்தில் நான் இரண்டு கனவுகள் பார்த்தேன். தொடர்ச்சியாக பார்த்த இந்த கனவுகள் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மை எனக்கு தெளிவாகத் தெரிந்தது.

முதலாவது கனவில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கரீஸ் என்ற பெயரிலுள்ள ஒரு பச்சை நிறத்திலுள்ள பழத்தை சாப்பிடுவதற்காக கொடுக்கின்றார்கள்.

இந்த கனவின் விளைவாக நான் உடனடியாக பைஅத் செய்து விட்டேன். அதற்குப் பிறகு எனது நிலை மிகச் சிறந்ததாக மாறி விட்டது.

கேம்பியாவைச் சேர்ந்த ஒரு நபர் கூறுகின்றார்: நான் கனவில் பார்த்தேன். இரு நபர்கள் என்னிடம் வந்து இந்தக் காலம் இமாம் மஹ்தி வெளிப்படும் காலமாகும் என்று கூறுகின்றார்கள். அந்த இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறினார்கள். கனவில் ஒவ்வொரு முறையும் அதே இரண்டு நபர்கள் என்னை சந்தித்து வந்தனர்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:** செனிகலின் தலைநகரமான டாக்கரில் வைத்து நான் ஒரு கனவு கண்டேன். அதில் எனது சகோதரரின் மகன் விரைவாக செல்லக்கூடிய குதிரையில் சவாரி செய்தவாறு என்னிடம் வந்து இரண்டு நபர்கள் உங்களை சந்திப்பதற்காக நதிக்கரையோரத்தில் உங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் என்று கூறினார். நான் அங்கு சென்ற போது அந்த இரு நபர்களில் ஒருவர் மற்றவரை சுட்டிக் காட்டியவாறு இவர் இந்தக் காலத்தின் இமாம் மஹ்தியாவார். இவரை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

பிறகு முபல்லிக் சாஹிப் இவரிடம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புகைப்படத்தைக் காட்டியபோது இவரைத்தான் நான் கனவில் கண்டேன் என்று அவர் கூறினார். நதிக்கரையோரத்தில் இவர் கண்ட இரு நபர்களில் ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆவார்கள் என்பதை அவர்களது படத்தைச் சுட்டிக் காட்டியவாறு அவர் கூறினார். கலீஃபாக்களின் புகைப்படங்களும் அவருக்குக் காட்டப்பட்டது. அதில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களை சுட்டிக் காட்டியவாறு நான் நதிக்கரையில் கண்ட இரண்டாவது நபர் இவர்தான் என்று அவர் கூறினார். கனவில் அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களுடன் இருப்பதை அவர் பார்த்தார்.

பிறகு நமது முபல்லிக்மார்கள் அவரிடம் சென்று புகைப்படங்களைக் காட்டிய நேரத்தில் அவர்களிடம் அவர் இவ்வாறு கூறினார்.

இன்று இரவு நான் கனவில் பார்த்தேன். இரண்டு நபர்கள் காரில் வந்தார்கள். நான் மிக நீண்ட காலமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு நபரின் படத்தை அவர்கள் எனக்கு காட்டினார்கள். இந்தக் கனவை நான் காலையில் எனது மனைவியிடம் கூறி இன்று சில விருந்தாளிகள் வருவார்கள் என்று கூறினேன். பிறகு

முழு நாளும் நான் வேறு எங்கும் செல்லவில்லை. அவர்கள் எப்போது வருவார்கள் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அல்லாஹ் உங்களைப் பற்றித்தான் எனக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தான். நீங்கள் இன்று மாலை வந்து இந்தப் புகைப்படங்களை எனக்கு காட்டியுள்ளீர்கள். எனவே எனது கனவு நிறைவேறி விட்டது. நான் எல்லா மக்களின் முன்பாக நின்று இந்த அறிவிப்பைச் செய்கின்றேன். அல்லாஹ் என்னிடம் இமாம் மஹ்தி வந்து விட்டார் என்று கூறியுள்ளான். மேலும் அஹ்மதிய்யத்தை உண்மையானது என்று மிகுந்த தைரியத்துடன் அவர் கூறினார்.

**அல்ஜீரியாவைச் சார்ந்த கலாப் ஸபீர் சாஹிப் கூறுகின்றார்:**

சிறு வயதில் நான் ஒரு கனவு பார்த்தேன். ஒரு வெண்மை நிறமுடைய ஒரு நபர் என்னிடம் வந்து உனது கைகளை எனது கைகளில் தந்துவிடு என்று கூறினார். அதன் மூலம் நான் என்னோடு அழைத்துச் செல்வேன் என்றும் கூறினார். ஆனால்,எனக்கு அவர் தொடர்பாக அச்சம் இருந்தது. இந்தக் கனவை ஏறக்குறைய ஒரு வருடம் வரை நான் பலமுறை பார்த்து வந்தேன். இறுதியில் நான் அந்த வெண்மையான நிறத்தைக் கொண்ட மனிதர் கூறியதை ஏற்றுக் கொண்டேன். அப்போது அவருடன் இன்னொரு மனிதரும் இருந்தார். அவரது தோற்றத்தையும், உயரத்தையும் பார்த்த போது அவர் ஒரு பெரிய மனிதராக எனக்கு தெரிந்தார். அவர்தான் அந்த வெள்ளை நிறத்தையுடைய மனிதரிடம் என்னைப் பற்றிப்பிடித்தவாறு அவருடன் அழைத்து வருமாறு கட்டளையிடுகின்றார். என்னை தன்னோடு அழைத்துச் செல்லும்படி அந்த நபரிடம் கூறியவரை மூன்று வருடங்களுக்குப் பிறகு நான் M.T.A -வில் பார்த்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் உண்மையைப் புரிந்து கொள்வதற்காகத்தான் இந்த இரண்டு நபர்களையும் அல்லாஹ் எனக்கு கனவில் காட்டியுள்ளான் என்பது அப்போதுதான் எனக்கு புரிந்தது. அதனால் நான் உடனடியாக பைஅத் செய்து விட்டேன்.

கனவில் அவர் கண்ட வெண்மையான நிறத்தையுடைய மனிதர் முஸ்தஃபா ஸாபிர் சாஹிப் ஆவார்கள். என்னை அழைத்து வரும்படி அவருக்குக் கட்டளையிட்ட நபர் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஆவார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

**பிறகு ஈராக்கிலுள்ள ஒரு கவிஞர் மாலிக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:**

அரபிச் சேனல் ஆரம்பமாகாத அந்தச் சமயத்தில் தான் எனக்கு M.T.A. பற்றிய அறிமுகம் கிடைத்தது. அதுவரை நான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களைப் புத்த மதத்தின் ஒரு பிரதிநிதியாகக் கருதி வந்தேன். ஆனால், ஹுஸூர் அவர்கள் வஃபாத் ஆன போது முஹம்மதிய ஒளி அவர்களின் முகத்தில் பொழிவதை நான் கண்டேன். எங்கள் வீட்டிலுள்ள அனைவரது உள்ளத்திலிருந்தும் அந்தோ! இந்த நபர் முஸ்லிமாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற குரல் எழுந்தது. ஹுஸூர் அவர்களை முஸ்லிமாக கருதாத நிலையிலும் கூட ஹுஸூர் அவர்களின் மரணத்தின் போது இவர்கள் எந்தக் காரணத்திற்காக மிக அதிகமாக அழுதனர் என்பது தெரியவில்லை. பிறகு தற்செயலாக அவர்களுக்கு M.T.A. -வின் அரபிச் சேனலைப் பார்க்க நேர்ந்தது.

**அவர்கள் கூறுகின்றார்கள்:** அந்த சமயத்திலிருந்தே நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் பைஅத்தில் நுழைந்து விட்டோம். எனது மனைவியும் இரண்டு கனவுகள் கண்ட பிறகு முதல் வாரத்திலேயே பைஅத் செய்து விட்டார்.

முதலாவது கனவில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எனது மகளுக்கு சில காகிதங்கள் தருவதை அவர் பார்த்தார். எனது மனைவி அந்தக் காகிதங்களைப் பார்த்த போது அது பைஅத் படிவம் என்பது தெரிந்தது.

இரண்டாவது கனவில் ஒரு நபர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தரப்பிலிருந்தும் எழுதப்பட்ட ஒரு கடித்ததைக் கொண்டு வருகின்றார். அது என் மனைவிக்கு எழுதப்பட்ட கடிதமாக இருந்தது. அதில் எவர் எனது வீட்டில் நுழைகின்றாரோ அவர் எனது குடும்பத்தைச் சார்ந்தவராவார் என்று எழுதப்பட்டிருந்தது.

அதற்குப் பிறகு எனது மனைவி பல கனவுகளைக் கண்டிருந்தார். இந்தக் கனவுகள் கண்ட மூன்று மாதங்கள் கழிந்த பிறகு எனது மகனும் அவனது மனைவியும் பைஅத் செய்தார்கள்.

பிறகு அவர் கூறுகின்றார்: கனவில் எங்களுக்கு நஜப் என்ற நகரத்தில் இமாம் மஹ்தி தோன்றி விட்டார் என்ற தகவல் கிடைத்தது. இதைக் கேட்டு மூன்று நண்பர்கள் அவர்களைப் பார்ப்பதற்காகச் சென்றோம். கனவில் அவரிடம் சென்று நீங்கள் இமாம் மஹ்தியா? நீங்கள் இமாம் மஹ்தி என்றால் உங்களிடம் பைஅத் செய்கிறோம் என்று கூறினோம். அதற்கு அவர் இல்லை; இல்லை . நான் ஒரு சீர்திருத்தவாதி மட்டுமேயாவேன். மஹ்தி ஏற்கனவே காதியானில் தோன்றி விட்டார் என்று கூறினார்.

மூன்றாவது கனவில் அவர்கள் என்னைப் பார்த்தார்கள். அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு உயரமான இடத்தில் பெருங்கூட்டத்தின் நடுவில் நீங்கள் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தீர்கள். அந்தக் கூட்டத்தில் இருந்த எல்லாரும் நின்று கொண்டு இருந்தார்கள். நான் மட்டும் உங்களுக்கு அருகில் கீழே அமர்ந்திருந்தேன். நீங்கள் அணிந்திருந்த ஆடையை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது உள்ளத்தில் சுப்ஹானல்லாஹ்! நீங்கள் இமாம் மஹ்தியின் ஆடையை எப்படி அணிந்தீர்கள்? என்று கேட்கின்றேன். சொற்பொழிவு முடிந்த பிறகு நீங்கள் எனது தலையில் கை வைத்தீர்கள். மேலும் உங்களுடைய உள்ளம் நிம்மதி அடைந்து விட்டதா? என்று கேட்டீர்கள். பிறகு உங்களுக்கு பசிக்கின்றது என்று நினைக்கிறேன். வாருங்கள். உங்களுக்கு நான் சாப்பாடு தருகிறேன் என்றும் கூறினீர்கள். ஆக, இது அவருடைய மூன்றாவது கனவாகும். இதற்குப் பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

**இவ்வாறே யாஸீன் சாஹிப் சிரியாவிலிருந்து எனக்கு எழுதியுள்ளார்:**

நான் பைஅத் செய்த பிறகு அல்லாஹ் எனக்கு தனது அருள்களை வழங்கியுள்ளான். இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் நிலைமையைப் பார்த்து நான் மிகவும் துயரமடைந்து இருந்தேன். இந்தத் துக்கத்தால் நான் அழிந்து விடுவேன் என்ற நிலை இருந்தது. நான் பல பிரிவுகளையும், மவ்லவிகளையும் பின்பறறி நடந்தேன். இறுதியில் எந்த நபரது வழியைப் பின்பற்றிச் சென்றேனோ அவர் என்னிடம் தன்னைப் பற்றி நான் இன்னொரு பெரிய மவ்லவியின் மாணவன் ஆவேன் என்று கூறினார். பிறகு இந்த நபர்தான் மஹ்தி என்று வாதம் செய்தார். அவர் உண்மையை விட்டும் வெகு தொலைவில் உள்ளார் என்பதை நான் தெளிவாகத் தெரிந்து கொண்டேன். நீ பொய் கூறுகிறாய் என்று அவரது முகத்திற்கு எதிரில் நான் கூறினேன். பிறகு இந்த நபர் தனது மனைவியுடன் ஒரு விபத்தின் மூலம் இறந்து விட்டார். 1997 ஆம் ஆண்டு நான் டிஷ் வாங்கினேன். பள்ளிவாசலில் இமாமத் செய்வதை விட்டு விட்டு வீட்டில் இருந்து வந்தேன். நான் உண்மையில் இருக்கின்றேன் என்று நான் நம்பினேன். ஆனால் இஸ்லாத்தின் மோசமான நிலையைக் கண்டு இந்த அழிந்துபோகக் கூடிய வாழ்க்கை விரைவாக முடிய வேண்டும் என ஆசைப்பட்டேன். நிரந்தரமான மறுமை வாழ்வு ஆரம்பமாக வேண்டும் என்று விரும்பினேன். 10 ஆண்டுகள் தனிமையிலும் துக்கத்திலும் ஆழ்ந்திருந்த பிறகு அல்லாஹ் என்னை உங்கள் பக்கம் செல்ல வழிகாட்டினான். அதனால் உள்ளத்திற்கு இன்பமும் நிம்மதியும் கிடைத்தது. இப்போது ஜுன் மாதத்தில் எனது மனைவி மற்றும் தாயாருடன் உம்ரா செய்யச் சென்றிருந்தேன். அப்போது பல உம்ராக்களை நான் செய்தேன். முதலாவது உம்ரா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சார்பாக செய்தேன். பிறகு எல்லா கலீஃபாக்களின் தரப்பிலிருந்தும் உம்ராக்கள் செய்யப்பட்டன. அல்லாஹ் அவற்றை ஏற்றுக் கொள்வானாக!

இவர் எழுதுகிறார்: நான் பைஅத் செய்வதற்கு முன் நான்கு அஹ்மதி சகோதரிகளைக் கனவில் கண்டேன். அவர்கள் நீங்கள் மிகப்பெரும் தகுதியைப் பெற்றவர்கள் ஆவீர்கள். உங்களைப் போன்று வேறு யாரும் இல்லை என என்னிடம் கூறினார். அவர்களில் ஒருவர் எனது கையைப் பிடித்தார். நான் அவரிடம் இறைவனிடம் ஆணையிட்டுக் கூறுங்கள். நீங்கள் இறைவன் மற்றும் அவனது தூதரின் சுன்னத்தில் நிலைத்து நிற்கின்றீர்களா? இஸ்லாத்தின் உண்மை உங்களுக்கு தெரியுமா? என்று கேட்டேன். நான் கூறிய அதே சொற்களை எத்தனை முறை அவர் மீண்டும் மீண்டும் உணர்வு பொங்கக் கூறினார் என்றால் அவரது கழுத்தின் நரம்புகள் எனக்கு தெரிய ஆரம்பித்தது. பிறகு நான் எனது கையைப் பிடித்த அந்த நபரிடம் இன்றிலிருந்து நானும் அஹ்மதியாகிறேன் என்று கூறினேன்.

பிறகு **அவர் எழுதுகிறார்:** இதற்குப் பிறகு கனவில் நான் உங்களைப் பார்த்தேன். நீங்கள் மிகவும் அவசரமாகச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தீர்கள். உங்களை நான் பார்த்த பிறகு நீங்கள் கிழக்குப் பக்கம் சென்று விட்டீர்கள்.

**அவர் கூறுகின்றார்:** பைஅத் செய்த பிறகு நீங்கள் ஒருமுறை நான் கனவில் பார்த்தேன். நான் அப்போது ஆலமே பர்ஸக்கில் இருக்கின்றேன். அங்கு நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களைப் பார்க்கின்றேன். அவ்வாறு பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு நபர் இப்போது டெலிபோன் மிர்ஸாவிடம் இருக்கின்றது. எவருக்கு டெலிபோன் மூலம் பேச வேண்டுமோ அவர் மிர்ஸா சாஹிப் மூலம் போன் பேசலாம் என்று அவர் கூறினார்.

பெனினில் உள்ள தூபே நகரத்தைச் சார்ந்த ஒரு அஹமதி நல்ல பொருளாதார வசதி படைத்தவராக இருந்தும் சந்தாக்களை முறையாக செலுத்துவதில் சோம்பேறியாக இருந்து வந்தார். அவருக்கு இது தொடர்பாக கவனமூட்டி போதனை செய்த பிறகும் அவருக்கு அதனால் எவ்வித தாக்கமும் ஏற்படாமல் இருந்தது.

இறுதியில் முரப்பி சாஹிபின் கடைசி ஆயுதமாக துஆ இருந்தது. அவர் துஆ செய்தார். அது எந்த அளவு வேலை செய்தது என்றால் சில நாட்களுக்கு முன் அந்த சகோதரர் முரப்பி சாஹிபிடம் வந்தார். பிறகு அவர் கூறியது என்னவென்றால், அவர் கனவில் என்னைப் பார்த்தார். கனவில் நான் அவரிடம் சென்று சந்தா பாக்கிகளைப் பூர்த்தி செய்யுங்கள் என்று கூறுகின்றேன். இது மிகவும் அதிகம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். இது அதிகமல்ல என்றும் நான் கூறினேன். இவ்வாறு அவர் கண்ட கனவை கூறிய பிறகு அவர் தனது எல்லா சந்தா பாக்கிகளையும் கொடுத்து முடித்து விட்டார்.

அல்ஜீரியாவிலிருந்து மூமின் சாஹிப் என்பவர் எழுதியுள்ளார்: ஆறு மாதங்களுக்கு முன் தான் எனக்கு ஜமாஅத் பற்றிய அறிமுகம் கிடைத்தது. எனக்கு திருப்தி ஏற்பட்டு நான் இமாம் மஹ்தி (அலை) அவர்களை உண்மையாளர் என்று ஏற்றுக் கொண்டேன். ஆனால் இதற்குப் பிறகு என்ன செய்ய வேண்டும்? என்று எனக்கு எதுவுமே புரியாமல் இருந்தது. அல்லாஹ் எனக்கு இரண்டு கனவுகளைக் காட்டினான்.

முதல் கனவில் அவர் என்னைப் பார்த்தார். அப்போது நிலவிய அந்த ஆன்மீகச் சூழலை எனது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது என்று அவர் கூறுகின்றார். இரண்டாவதாக கண்ட கனவில், அவர் அழுவதை அவர் பார்க்கின்றார். பிறகு என்னிடம் இறைவனுக்காக நான் என்ன செய்ய வேண்டும் என்று கூறுங்கள் என்று கேட்கின்றார்.

அப்போது நான் அவரது கையில் இரண்டு பைஅத் படிவங்களைக் கொடுக்கின்றேன். பிறகு கண்விழித்து எழுந்த பிறகு அவர் இணையதளத்தைத் திறந்து பார்த்த போது கனவில் கண்ட அதே இரண்டு பைஅத் படிவங்கள் அவருக்கு அதில் கிடைத்ததாகக் கூறுகின்றார். பிறகு நான் உடனடியாக பைஅத் செய்து விட்டேன். அப்போதிருந்தே நான் என்னிடம் ஒரு தூய மாற்றத்தை உணர்கின்றேன் என்று கூறுகின்றார்.

இந்த மனத்தூய்மை நிறைந்துள்ள நல்ல ஆன்மாக்களுக்கு ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வே வழி காட்டுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மையைப் புரிந்து அவர்கள் ஜமாஅத்தில் இணைகின்றார்கள். அல்லாஹ் எப்போதும் இவர்களுக்கு உறுதியாக நிலைநிற்கும் தன்மையை வழங்குவானாக! ஈமானிலும் நிச்சய உறுதியிலும் முன்னேறுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு தொடர்புடைய அந்த அருள்கள் நமக்கு கிடைக்க உதவி புரிவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 03.06.2011**

Translated by : **Maulvi M. RAFEEQ AHMAD H.A.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**